

# பனித்துளி செய்திகள்!

"அவர் சொல்ல ஆகும்! அவர் கட்டளையிட நிற்கும்!!" (சங்கீதம் 33:9)

துளி செய்திகள் உங்கள் வாழ்வை சாரம் ஏற்றும்..... சவாலிடும்!

(திங்கள்தோறும்)

20.04.2026 துளிகள் – 16

## 'தாழ்மை' துஷ்பிரயோகத்தை தேவன் வெறுக்கிறார்!

'தாழ' குதியுங்கள்! அப்போது தூதன் உங்களைத் தாங்குவார்! என்ற குரல், வசனத்திற்கு ஒப்பான குரல் போலவே இருந்தாலும், அது சாத்தானின் குரல்! என்றே இயேசு எடுத்துரைத்தார்! (லூக்கா 4:9-11). சுயாதீனமாய் 'தன்னைத் தானே தாழ்த்தும்' கௌரவமே தேவன் நமக்கு அளித்துள்ளார்! உங்களின் சுயாதீனமான தாழ்மையை யாரும் பறித்து, உங்களை 'தாழ்வுமனப் பான்மைக்குள்' தள்ளி விடாதிருக்க கவனம் கொள்ளுங்கள்!

இயேசுவின் சீஷர்களை, அவரின் பக்தர்களை "நீ இப்படி 'தாழ' குதித்து விட்டால், பரத்திலிருந்து உதவிக்கரம் 'கிருபை' என்ற பெயரில் வெளிப்பட்டு, உன்னை உயர்த்திவிடும்!" என, பொய் கிருபை காண்பித்து, உங்களை மடங்கடிக்கும் குரலை 'பகுத்தறிந்து' அதை உதறித் தள்ளுங்கள்!!

**– ரத்னம்**